# மே நடப்பு நிகழ்வுகள்

## முக்கிய தினங்கள் :-

| | | | |
|---|---|---|---|
| 1) | சர்வதேச செவிலியர் தினம் | - | மே 12. |
| 2) | தேசியத் தொழில் நுட்ப தினம் / பொகரான் அணுகுண்டு சோதனை நினைவு தினம் | - | மே 11. |
| 3) | சர்வதேச குடும்பங்களின் தினம் | - | மே 15. |
| 4) | உலக நியாயமான வணிக தினம் (ஒவ்வொரு வருடமும் மே மாதம் இரண்டாம் சனிக்கிழமையில் அனுசரிக்கப்படுகிறது). | - | மே 13 |
| 5) | சர்வதேச, பாலியல் சிறுபான்மையினர் மீதான உரிமை மீறல்களுக்கெதிரான தினம் | - | மே 17. |
| 6) | சர்வதேச அருங்காட்சியக தினம் | - | மே 18. |
| 7) | உலக தொலைத்தொடர்பு மற்றும் தகவல் சமுதாய தினம் | - | மே 17. |
| 8) | சர்வதேச உயிரினப் பன்முகத் தன்மை தினம் | - | மே 22 |
| 9) | உலக அளவியல் தினம் | - | மே 20. |
| 10) | உலக பேச்சுவார்த்தை (ம) வளர்ச்சிக்கான கலாச்சார பன்முகத்தன்மை தினம் | - | மே 21. |
| 11) | உலக ஆமை தினம் | - | மே 23. |
| 12) | உலக புகையிலை எதிர்ப்பு தினம் | - | மே 31. |
| 13) | ஐக்கிய நாடுகளவையின் அமைதிப்படைக்கான சர்வதேச தினம் | - | மே 29. |
| 14) | தேசிய கங்கை நதி தூய்மைப்படுத்துவதற்கான உறுதிமொழி தினம் | - | மே 2. |
| 15) | தேசிய குழந்தைத் தொழிலாளர் முறைக்கெதிரான தினம் | - | ஏப்ரல் 30. |
| 16) | உலக தூனா மீன் தினம் | - | மே 2. |
| 17) | உலகப் பத்திரிக்கை சுதந்திர தினம் | - | மே 3. |
| 18) | உலக ஆஸ்துமா தினம் | - | மே 2. |
| 19) | சர்வதேச தீயணைப்பு வீரர்கள் தினம் | - | மே 4. |
| 20) | சர்வதேச உணவு கட்டுப்பாட்டிற்கான தினம் | - | மே 6. |
| 21) | சர்வதேச வலசை பறவைகள் தினம் | - | மே 9. |
| 22) | உலக செஞ்சிலுவை (ம) செம்பிறை தினம் | - | மே 8. |
| 23) | புத்தபூர்ணிமா (அ) சர்வதேச வெசாக் தினம் | - | மே 10. |
| 24) | உலக தாலசீமியா தினம் | - | மே 8. |

## ஒப்பந்தங்கள், குழுக்கள் (ம) திட்டங்கள் :-

1) துருக்கி அதிபர் **ரீசிப் தாயீப் எர்டோகன்** இந்தியாவிற்கு வருகை புரிந்ததால், இரு நாடுகளுக்கிடையே **தொலைத்தொடர்புத் துறை, கலாச்சார பரிமாற்றம், இந்திய வெளியுறவுத் தொடர்பு நிறுவனத்திற்கும் துருக்கியின் வெளியுறவு நிறுவனத்திற்கும் இடையில் "புரிந்துணர்வு ஒப்பந்தம்"** கையெழுத்தானது.

2) முக்தி ஜோதா ஸ்காலர்ஷிப் :-
வங்காள தேச நாட்டிலுள்ள **சுதந்திர போராட்ட வீரர்களின் குழந்தைகளில் ஆண்டொன்றுக்கு 100 பேருக்கு இலவச மருத்துவ சிகிச்சை** வழங்கப்படும்.

3) வித்யா – வீர்தா அடியான் :-

நாடெங்கிலும் **பல்கலைக் கழகங்களில் பயிலும் மாணவர்களிடையே தேசப்பற்றுச் சார்ந்த வீர உணர்வை வளர்ப்பதும்** இதன் முக்கிய நோக்கம்.

இந்தியாவின் மிக உயர்ந்த **இராணுவ வீரதீர செயல்களுக்கு வழங்கப்படும் "பரம்வீர் சக்ரா" விருது பெற்ற இராணுவ வீரர்களின் புகைப்படங்களை காட்சிப்படுத்துவதற்கு பல்கலைக் கழகங்கள்** ஊக்கப்படுத்தப்பட்டன.

4) தாரங் சஞ்சார் :-

நாடெங்கிலும் மொபைல் போன் டவர்களைப் பற்றிய தகவல்களைப் பகிர்ந்து கொள்ள **மத்திய தொலைதொடர்பு துறையினால் சமீபத்தில் துவக்கப்பட்டுள்ள இணையதள** வசதியாகும்.

5) ஆர்.பி.வர்மன் குழு :-

வங்கி முறையில் பயன்படுத்தப்படும் பல்வேறு தொழில்நுட்பங்களுக்கான, தொழில்நுட்ப தரத்தை பரிந்துரைக்க **மத்திய வங்கிக் கடன் மற்றும் திவால் வாரியத்தால்** அமைக்கப்பட்ட குழுவாகும்.

**ஆர்.பி.வர்மன்** தற்போது **தேசிய புள்ளியியல் கமிஷன் தலைவராக** உள்ளார்.

6) ஆண்டி ரோமியோ குழு :-

**பெண்களின் பாதுகாப்பை உறுதி செய்ய** இக்குழுவை உத்திரபிரதேச அரசு அமைத்துள்ளது.

7) **"ஈகர் லயன்"** பன்னாட்டு இராணுவ பயிற்சி ஜோர்டான் நாட்டில் நடைபெற்றது.

8) பாலிகாதான் **அமெரிக்கா மற்றும் பிலிப்பைன்ஸ் நாடுகளுக்கிடையேயான கூட்டு இராணுவ பயிற்சி மணிலாவில்** நடைபெற்றது.

9) வேலைவாய்ப்பு கொள்கைகளுக்கான நம்பகமான தகவல்கள் வழங்குவதற்கு **நிதி அயோக்கின் துணைத் தலைவர் அரவிந்த் பனகாரியா** அவர்களின் தலைமையில் அமைக்கப்பட்டுள்ளது.

10) மருத்துவ காப்பீட்டு திட்டத்துடன் ஆதாரை இணைக்க emchis online **என்ற மொபைல் ஆப் அறிமுகம்** தமிழக அரசின் சுகாதாரத் துறையினரால் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

11) இந்தியா (ம) சிலி நாடுகளுக்கிடையே **"முன்னுரிமை வர்த்தக ஒப்பந்தம்" (Preferential Trade Agreement)** 16-05-2017 **முதல் அமலுக்கு** வந்துள்ளது.

12) வானிலை (ம) பெருங்கடல் ஆராய்ச்சி தொடர்பான தகவல்களை பகிர்ந்து கொள்வதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் இந்திய கடற்படை மற்றும் அஹமதாபாத்திலுள்ள விண்வெளி பயன்பாட்டு மையம் இடையே செய்யப்பட்டுள்ளது.

13) **FAME (Faster Adoption and Manufacturing of Electric Vehicles Scheme) 2015-ல் துவங்கப்பட்ட இதன் நோக்கம் மின்சாரத்தில் மற்றும் பிறமாற்று**

**எரிசக்திகளில் இயங்கும் வாகனங்களின்** பயன்பாட்டை அதிகரிக்கச் செய்வதாகும்.

14) **SIMBEX (Singapore India Maritince Bilateral Exercise) எனப்படும் இந்தியா மற்றும் சிங்கப்பூர் நாடுகளின் கடற்படைகளுக்கிடையேயான 24வது கூட்டுப்பயிற்சி.**

15) ஆபரேசன் கிளீன் மணி போர்ட்டல் :
வரிஏய்ப்பு செய்வோரை எளிதாக கண்டறியும் வண்ணமும், மக்களிடையே வரி செலுத்துவதற்கான சமுதாய பொறுப்புணர்வை ஏற்படுத்தவும் இந்த **இணையவழி சேவையை மத்திய நிதியமைச்சர் அருண் ஜெட்லி** துவக்கி வைத்துள்ளார்.

16) சென்னை **மெட்ரோ ரயிலுக்கு ஐ.சி.எப்.இ-ல் பெட்டிகளை தயாரிக்க பிரான்ஸ் நாட்டுடன் ஒப்பந்தம்** செய்யப்பட உள்ளது.

<u>**சர்வதேச செய்திகள் :-**</u>

1) தென்கொரியாவின் புதிய அதிபர் - **மூன் ஜே இன்.**

2) சீன தலைநகர் பெய்ஜிங்கில் நடைபெற்ற **ஆசிய கிராண்ட் ப்ரீ பாரா தடகளப் போட்டியில் ஆடவர் 200 மீ ஓட்டத்தில் இந்திய வீரர்கள் ராமுத்ரி சோமேஷ்வர ராவ் தங்கமும், ஹோகாட்டோ வெண்கலமும்** வென்றனர்.

3) ஜப்பானிலுள்ள **"ஆண்கள் மட்டும்" வசிக்கும் தீவான ஓகினோஷிமா தீவுக்கு உலக பாரம்பரிய தலம் என்ற தகுதி வழங்க சர்வதேச நினைவுச் சின்னங்கள் (ம) தலங்களுக்கான கவுன்சில்** பரிந்துரை செய்துள்ளது.

4) சீனா முற்றிலும் **உள்நாட்டிலே தயாரிக்கப்பட்ட "சி919" எனும் பயணிகள் ஜெட் விமானத்தை** வெற்றிகரமாக சோதித்துள்ளது.

5) ஆர்ட்டிக் **ஆற்றல் கூடுகை** 2017 **(Artic Energy Summit) பின்லாந்திலுள்ள ஹெல்சிங்கி நகரத்தில் செப்டம்பர் 2017-ல்** நடைபெற உள்ளது.

6) சாவில்ஸ் **தொழில்நுட்ப நகரங்கள் பட்டியல் 2017-ல் முதலிடத்தை அமெரிக்காவின் டெக்சாஸ் மாகாணத்தின் தலைநகரமான "ஆஸ்டின் நகரம்"** பெற்றுள்ளது. இப்பட்டியலில் **இந்தியாவின் பெங்களுரு நகரம் 20-வது இடம்** பெற்றுள்ளது.

7) **மே 2017-ல் காலரா நோய் பரவலால் சுகாதார அவசர நிலை பிரகடனம் அறிவிக்கப்பட்டுள்ள நாடு – யேமன்.**

8) உட்ரோ வில்சன் **உலக பெரு நிறுவன குடியுரிமை விருது 2017 பெற்றுள்ள முதல் இந்திய பெண்மணி எனும் பெருமையை ஐசிஐசிஐ வங்கியின் தலைமைப் பொறுப்பை வகிக்கும் சாந்தா கொச்சார்** பெற்றுள்ளார்.

9) G-7 அமைப்பின் **53-வது கூடுகை இத்தாலியிலுள்ள தோர்மிணன் சிசிலி** நகரில் நடைபெற உள்ளது.

10) சீனா (ம) தென்கொரியா நாடுகளில் **"இந்திய மாம்பழத் திருவிழா"** நடத்த இந்திய அரசு திட்டமிட்டுள்ளது.

11) பிரான்ஸ் நாட்டின் **புதிய பிரதமராக "எட்வர்ட் பிலிட்"** என்பவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

12) இஸ்லாமிய கூட்டமைப்பு நாடுகளின் **மனித உரிமை கமிஷனின் தலைமையிடம் "சவுதி அரேபியாவின் ஜெட்டா" நகரில்** திறந்து வைக்கப்பட்டுள்ளது.

13) G-20 நாடுகளின் **தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சர்களின் கூடுகை 2017 மே 18 முதல் 19 வரை ஜெர்மனியிலுள்ள பேட் நியூவனார்** நகரில் நடைபெற்றது.

14) **பிலிப்பைன்ஸ் நாட்டில் பொது இடங்களில் புகைப்பிடிப்பதற்கு தடை** விதிக்கப்பட்டுள்ளது.

15) ∴போர்ப்ஸ் பத்திரிக்கையினால் வெளியிடப்பட்டுள்ள **சர்வதேச அளவில் மிகப்பெரிய மாற்றத்தை உருவாக்கிய 25 தொழிலதிபர்கள் பட்டியலில் ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸ் நிறுவனத் தலைவர் "முகேஷ் அம்பானி" முதலிடம்** பிடித்துள்ளார்.

16) ஜப்பானின் **125-வது மன்னர் அகிஷிட்டோ** பதவி விலகுகிறார்.

17) ஆஸ்திரேலியாவின் மெல்போர்ன் நகரில் உள்ள **ஓமர் எனப் பெயரிடப்பட்டுள்ள பூனை 120 செ.மீ நீளம் வளர்ந்து உலகின் நீண்ட பூனையாக கின்னஸ் சாதனை** படைக்க உள்ளது.

18) ஈரான் நாட்டின் **12-வது அதிபராக ஹசன் ரவுஹானி** தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

19) **"லேண்டிங் கிராப்ட்" ரக மரியா 3 என்ற காணாமல் போன மாலத்தீவு கப்பலை டார்னியர் விமானம் (ம) ஐஎன்எஸ் கிரீச்** தேடிக் கண்டுபிடித்தது.

20) 2018-ம் ஆண்டிற்கான **ஆப்பிரிக்க வளர்ச்சி வங்கியின் வருடாந்திர கூடுகை தென்கொரியாவில் நடைபெற உள்ளது. 2017-ம் ஆண்டிற்கான கூடுகை குஜராத் மாநிலத்தில்** நடைபெற்றது.

21) உலக சுகாதார அமைப்பின் **புதிய இயக்குநர் ஜெனரலாக எத்தியோப்பியா நாட்டைச் சேர்ந்த சுகாதாரத்துறை வல்லுநர் "டெட்ராஸ் அகனோம் செப் ரேயேசஸ்"** என்பவர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

22) **70-வது உலக சுகாதார கூடுகை சுவிட்சர்லாந்து நாட்டிலுள்ள ஜெனீவா** நகரில் நடைபெற்றது.

23) **இந்தியாவில் தொழில் துவங்குவதற்கான கூடுகை ஐக்கிய அரபு எமிரேட்டிலுள்ள அபுதாபியில்** நடைபெற்றது.

24) சர்வதேச அளவில் **உருக்கு உற்பத்தியில் இந்தியாவிற்கு 2-வது இடம்** கிடைத்துள்ளது.

25) எவரெஸ்ட் சிகரத்தில் ஏறி சாதனை படைக்கும் முயற்சியில் வெற்றியடைந்த **உத்திரபிரதேச மாநிலம் மொரதாபாத்தைச் சேர்ந்த ரவிகுமார் திரும்பி வரும் வழியில் உயிரிழந்தார்.**

26) "ROBOCOP" **எனும் பெயரில் இயந்திர மனிதனை காவல்துறை அதிகாரியாக நியமித்த நாடு – துபாய்**

27) **ஈகுவடார் நாட்டின் அதிபராக லெலின் மொரினோ** தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

28) இந்தியா (ம) பிரான்சு நாடுகளின் முன்னெடுப்பால் **2015-ம் ஆண்டில் உருவான சர்வதேச சூரிய ஆற்றல் கூட்டமைப்பில் 6-வது உறுப்பினராக உலகின் மிகச்சிறிய குடியரசு நாடான நௌவ்ரு (Nawru)** இணைந்துள்ளது.

29) "NATO" (North Atlantic Treaty Organization) **அமைப்பின் 2017-ம் ஆண்டிற்கான கூடுகை பெல்ஜியம் நாட்டிலுள்ள பிரஸ்ஸல்ஸ் நகரில்** நடைபெற்றது.

30) e-sanad போர்ட்டல் :-
**வெளிநாட்டில் படிக்க செல்லும் மாணவர்களின் சான்றிதழ்கள் மற்றும் பிற ஆவணங்களை சரிபார்க்கும் முறையை எளிமை படுத்துவதற்காக மத்திய வெளியுறவுத்துறையினரால் துவங்கப்பட்டுள்ள இணையதள சேவையாகும்.**

31) உலக அளவில் சுற்றுலா பயணிகளை பெரிதும் கவர்ந்த **10 முன்னணி சுற்றுலா தலங்களின் பட்டியலில் "தாஜ்மகால் 5-வது இடம்"** பிடித்துள்ளது.

32) உலகின் **மக்கள் அடர்த்தி மிகுந்த நகரங்களில் "டாக்கா" முதல் இடம்.**

33) நேபாள நாட்டின் **பிரதமர் புஷ்பகமல் தாஹல் பிரசண்டா திடீரென ராஜினாமா** செய்துள்ளார்.

34) **"மோரா புயல்" - வங்காள தேசத்தில பெரும் பாதிப்புகளை** ஏற்படுத்தியுள்ளது.

35) G-7 (P5therman) **நாடுகளின் கூடுகை இத்தாலியில் சிசிலியிலுள்ள தோர்மினா நகரில்** நடைபெற்றது.

36) ரிசர்வ் வங்கியினால் **நிதி கல்வியறிவு வாரம் ஜுன் 5 முதல் 9 வரை** அனுசரிக்கப்பட உள்ளது.

37) ஆசிய – பசுபிக் நாடுகளில் மிகவும் சிக்கலான **வரிவிதிப்பு வரைமுறைகளைக் கொண்ட நாடாக சீனா** உள்ளது.

38) உலக தெரு **உணவு கூடுகை 2017 பிலிப்பைன்ஸ்** நாட்டில் நடைபெற்றது.

39) அமெரிக்காவின் ஜியார்ஜியா மாகாணத்தில் நடைபெற உள்ள **லிட்டில் மிஷ் யுனிவர்ஸ் போட்டியில் இந்தியா சார்பில் ஒடிஷா மாநிலத்தைச் சேர்ந்த "பத்மாலயா நந்தா"** பங்கேற்க உள்ளார்.

40) தனக்கென சொந்தமாக **"மைக்ரோசாப்ட் எழுத்துருவை" பெற்றுள்ள முதல் நகரம் என்ற பெருமையை துபாய் நகரம்** பெற்றுள்ளது.

41) வன்முறையில் பாதிக்கப்பட்ட குழந்தைகளின் மேம்பாட்டிற்காக **ஐ.நா.வின் குழந்தைகள் நலநிதியமான யுனிசெப் தென்னாப்பிரிக்காவில் நடத்தும் நிதி சேர்ப்பு நிகழ்வில் இந்திய நடிகை பிரியங்கா சோப்ரா** பங்குபெறவுள்ளார்.

42) ஐ.நா.வின் மனித உரிமை அமைப்பின் **2017-ம் ஆண்டிற்கான சர்வதேச மறு ஆய்வு கூடுகையில் இந்தியாவின் அட்டர்னி ஜெனரல் "முகுல் ரோஹத்கி" பங்கு** பெற உள்ளார்.

43) சிரியாவில் போர் அகதிகளை காப்பாற்றிய **யூஸ்ரா மார்டினி எனும் பெண் ஐ.நா.வின் அகதிகளுக்கான ஹை கமிஷன் அமைப்பின் நல்லெண்ண தூதுவராக** நியமிக்கப்பட்டுள்ளளார்.

44) உலகின் மிக உயரமான **இரயில்வே பாலம் காஷ்மீரில்** கட்டப்பட உள்ளது. இது **பாரீசில் உள்ள ஈபிள் டவரை விடவும்** உயரமானது. காஷ்மீரில் உள்ள செனாப் நதியின் குறுக்கே மிக உயரமான **இரயில்வே பாலம் கட்டப்பட உள்ளது. (1.3 கிமீ நீளம், 359 மீ உயரம்). ஈபிள் டவரின் உயரம் 324 மீட்டர்** ஆகும்.

45) உலகளவில் பத்திரிக்கையாளர்களுக்கு எதிராக நடைபெறும் வன்முறைகளில் **"இந்தியா 8வது இடத்தில்"** உள்ளது.

46) பிரான்ஸ் நாட்டின் **புதிய அதிபராக இமானுவேல் மக்ரோன்** தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். பிரான்ஸ் நாட்டின் மிக இளம் வயது அதிபராக **இமானுவல் மாக்ரன்** தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

47) அமெரிக்காவின் எரிசக்தி துறையில் முக்கிய அமைப்பான **மத்திய எரிசக்தி ஒழுங்குமுறை ஆணையத்தின் உறுப்பினராக நீல்** சாட்டர்ஜியை **ஜனாதிபதி டிரம்ப்** நியமனம் செய்துள்ளார்.

48) ஐ.நா.மனிதாபிமான விவகாரங்களுக்கான ஒத்துழைப்பு அலுவலகத்தின் துணைச் செயலர் ஜெனரலாக இங்கிலாந்தைச் சேர்ந்த **மார்க் லொகொக்** நியமிக்கப்பட்டுள்ளார்.

49) உலக உணவு பாதுகாப்பு குழுவின் சர்வதேச அளவில் தேர்வு செய்யப்பட்ட 5 **உறுப்பினர்களில் ஒருவராக இந்தியாவிலிருந்து எம்.எஸ்.சுவாமிநாதன்** அவர்களும், **அறக்கட்டளை தலைவர் டாக்டர் மதுரா சுவாமிநாதன்** அவர்களும் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

50) ஐ.நா.பாதுகாப்புக் கவுன்சிலில் **இந்திய நிரந்தர உறுப்பினராக நெதர்லாந்து ஆதரவு** தெரிவித்துள்ளது.

51) நெதர்லாந்து நாட்டுக்கான **இந்தியத் தூதராக வேணு ராஜாமணி** நியமிக்கப்பட்டுள்ளார்.

52) **மே 8, 9 – ம் தேதிகளை இரண்டாம் உலகப் போரில் மரணமடைந்த மக்களை நினைவு கூறுவதற்கான தினமாக** ஐக்கிய நாடுகளவையின் பொது சபையினால் அறிவிக்கப்பட்டது.

53) நியூயார்க் இந்திய திரைப்பட விழாவில் **இந்திய நடிகை கொங்கனா சென் ஷர்மா** சிறந்த நடிகை விருது பெற்றுள்ளார்.

**தேசிய செய்திகள் :-**

1) வைப்பை, எல்இடி திரை உள்பட பல்வேறு அதிநவீன வசதிகள் கொண்டு, மணிக்கு 200 கி.மீ வேகத்தில் செல்லக் கூடிய **"தேஜஸ் அதிவிரைவு ரயில்" தில்லி – சண்டிகர் இடையே** விரைவில் இயக்கப்பட உள்ளது.

2) சீன எல்லை அருகே **பிரம்மபுத்ரா ஆற்றின் குறுக்கே கட்டப்பட்ட இந்தியாவிலேயே மிக நீளமான பாலம் மே 26-ம் தேதி பிரதமரால்** திறந்து வைக்கப்பட உள்ளது.

3) திருமங்கலம் - நேரு பூங்கா இடையே **சென்னையின் முதல் சுரங்க வழி மெட்ரோ ரயில் சேவையை மத்திய மந்திரி வெங்கய்யாநாயுடு, முதல் அமைச்சர் பழனிச்சாமி** அவர்களும் தொடங்கி வைத்தனர்.

4) 2016-17 நிதியாண்டில் **தென்னிந்திய மாநிலங்களில் அதிக வருவாய் பற்றாக்குறை உள்ள மாநிலமாக தமிழ்நாடு** இருப்பதாக ரிசர்வ் வங்கி ஆண்டறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

5) **கேட்கும் திறன் குறைபாடுள்ளோர் இயக்கும் வாகனங்களுக்கு பிரத்தியேக இலக்கினையை (Logo) வழங்கும் திட்டத்தை, இந்தியாவிலேயே முதல் மாநிலமாக தெலுங்கானா மாநிலம்** அறிமுகப்படுத்தியுள்ளது.

இந்த **"லோகோ" – வை ஹைதராபாத்தைச் சேர்ந்த மணிகண்டா அன்னபிரகாதா எனும் செவித்திறன் குறைவுடைய கிராபிக்ஸ் வடிவமைப்பாளர்** வடிவமைத்துள்ளார்.

6) இந்தியாவில் தேசிய கூடைப்பந்து கழகத்தின் **முதல் கூடைப்பந்து பயிற்சி அகதெமி உத்திரப்பிரதேசத்திலுள்ள "கிரேட்டர் நொய்டா"** பகுதியில் துவக்கப்பட்டுள்ளது.

7) இந்தியாவில் **மொத்த விலை குறியீட்டு எண் மற்றும் தொழிற்துறை உற்பத்தி குறியீட்டு எண் ஆகியவற்றை கணக்கிடம் அடிப்படை ஆண்டு 2004 - 2005 லிருந்து 2011 - 2012 ஆம் ஆண்டாக** மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

8) பெங்களுரை மையமாகக் கொண்டு செயல்படும் போது, விவகார மையம் எனும் அமைப்பு வெளியிட்டுள்ள **"மாநில ஆளுமைக்கான பொது விவகார பட்டியல் 2017" – ல் கேரளா முதலிடம்** பெற்றுள்ளது.

9) உலக வங்கியின் அனைவருக்கும் **மின்சாரம் கிடைக்கச் செய்துள்ள நாடுகளின் தரவரிசைப் பட்டியலில் 2014-ல் 99-வது இடத்திலிருந்து, இந்தியா 2017-ம் ஆண்டில் 26-வது இடத்திற்கு** உயர்ந்துள்ளது.

10) இந்தியாவிலேயே முதல்முறையாக **சென்னை தியாகராய நகர் பகுதியில் உள்ள சிட்டி யூனியன் வங்கி கிளையின் வாடிக்கையாளர் சேவையில் "மனித உருவம் கொண்ட ரோபோ"** ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

11) மேற்கு வங்க மாநிலத்தில் அனைத்து பள்ளிகளிலும் **பெங்காலி மொழியை கட்டாயம் பயிற்றுவிக்க வேண்டும்** என்று அம்மாநில அரசு உத்தரவிட்டுள்ளது.

12) ஒற்றை ஓடுபாதை கொண்ட விமான நிலையங்களில், **உலகின் மிக பரபரப்பான விமான நிலையமாக "மும்பை விமான நிலையம்"** உள்ளது.

13) ஜுன் 2017 - ல் லண்டனில் நடைபெற உள்ள சாம்பியன் டிராபி 2017 போட்டிகளில் நடுவராக செயல்படுவதற்காக, இந்தியாவிலிருந்து சுந்தரம் ரவி என்பவர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

14) புதுப்பிக்கத்தக்க **எரிசக்திக்கான கவர்ச்சிகரமான நாடுகளின் பட்டியல் 2017-ல் இந்தியா 2-வது இடம் பெற்றுள்ளது. சீனா முதலிடம் பிடித்துள்ளது.**

15) இந்தியாவின் **நிறுவன அடையாள மற்றும் நிதி தொடர்பான அறிக்கை 2017-ன் படி மிகவும் தரம் வாய்ந்த இந்திய நிறுவன அடையாளமாக டாடா குழுமம்** தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

16) இந்தியாவின் **"முதல் நீர் வாழ் வானவில் தொழில்நுட்ப பூங்கா சென்னையில்"** அமைக்கப்பட உள்ளது.

17) வெப்பநிலை அதிகரிப்பின் காரணமாக **ஒடிஷா மாநிலம் முழுவதும் "ஆரஞ்சு" எச்சரிக்கையை இந்திய காலநிலை ஆராய்ச்சி துறை** அறிவித்தது.

18) சீக்கியர்களின் **மத நம்பிக்கை சார்ந்த சக்திகளை இத்தாலி அரசு தடை** செய்துள்ளது.

19) இந்திய **விவசாய ஆராய்ச்சி நிறுவனம் அசாம் மாநிலத்தில்** அமைய உள்ளது.

20) புதுப்பிக்கத்தக்க ஆற்றல் மூலங்களிலிருந்து மின்சாரத்தை தயாரிப்பதற்கான **இந்தியாவின் முதல் "ஸ்மார்ட் கிரிட் தொழில்நுட்பம்" இந்திய பொறியியல் அறிவியல் தொழில்நுட்ப கல்வி நிறுவனத்தினால்** உருவாக்கப்பட்டுள்ளது. இந்நிறுவனம் **மேற்கு வங்கத்தில் சிவ்பூர் பகுதியில்** அமைந்துள்ளது.

21) இந்திய அளவிலான **75 பரபரப்பான இரயில் நிலையங்களில் மிகவும் தூய்மையான இரயில் நிலையம் என்ற பெருமையை ஆந்திரபிரதேச மாநிலத்திலுள்ள "விசாகப் பட்டினம் இரயில் நிலையம்"** பெற்றுள்ளது.

22) ஐக்கிய நாடுகளவையின் உலக பொருளாதார சூழ்நிலைகள் மற்றும் கணிப்புகள் மறு மதிப்பீட்டு அறிக்கையின்படி **2017-18 - ஆம் ஆண்டிற்கான இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி 7.3%** ஆக இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது.

23) இந்தியாவிலேயே **அதிகம் பேர் நகரப் பகுதிகளில் வசிக்கும் மாநிலமாக தமிழகம்** உள்ளது.

24) "சுவதேஷ் தர்ஷன் திட்டம்"
கன்னியாகுமரி கடல் நடுவில் உள்ள **விவேகானந்தர் நினைவு மண்டபத்திற்கும், திருவள்ளுவர் சிலைக்கும் இடையே புதிய நடைபாலம்** அமைக்கப்பட உள்ளது.

25) தமிழக அரசின் **டெல்லி ஆலோசகர் பவன் ரெய்னா தனது பதவியை ராஜினாமா** செய்துள்ளார்.

26) **அரிசி, கோதுமை, பால், தயிருக்கு ஜி.எஸ்.டி.வரியில் இருந்து விலக்கு** அளிப்பதாக முடிவு செய்யப்பட்டுள்ளது.

27) மின்னணு பணப்பரிமாற்ற சேவையில் ஈடுபட்டு வந்த **பேடிஎம் நிறுவனம் பேமெண்ட் வங்கி சேவையை தொடங்கியுள்ளது. இதன் தலைவர் விஜய் சேகர் சர்மா** ஆவார்.

28) ரூபாய் நோட்டில் மின்சாரம் :-
ஒடிசா மாணவன் **லக்மண் துண்ட் என்பவர் மத்திய அரசால் செல்லாதென அறிவிக்கப்பட்ட பழைய 500 ரூபாய் நோட்டிலிருந்து மின்சாரம் தயாரித்து சாதனை** படைத்துள்ளார்.

29) இந்தியாவின் **முதல் நீருக்கடியிலான சுரங்க இரயில் பாதை கூக்ளி ஆற்றினால்** அமைக்கப்பட்டுள்ளது.

30) தேசிய **சிறுபான்மையினர் ஆணையத்துக்கு தலைவராக உத்திரபிரதேசத்தை சேர்ந்த சமூக ஆர்வலர் கயாருல்ஹசன்** நியமிக்கப்பட்டுள்ளார்.

31) **மாற்றுத் திறனாளிகளுக்கான இட ஒதுக்கீடு 3% லிருந்து 4% ஆக உயர்த்தி முதல்வர் பழனிசாமி** உத்தரவிட்டுள்ளார்.

32) அசாமில் **தின்சுகியா மாவட்டத்திற்கு உட்பட்ட சாதியா நகருக்கும், அருணாசலபிரதேசத்தின் தோலாவுக்கும் இடையே உள்ள பிரம்மபுத்திராவின் கிளை நதியான லோஹித் நதியின் மீது நாட்டிலேயே மிகவும் நீளமான ஆற்றுப் பாலத்தை பிரதமர்** திறந்து வைத்தார்.

33) **கோவா மாநிலம் உருவான நாள் - 1987 மே 30, 1961 டிசம்பர் 19 முதல் 1987 மே 30 வரை இந்தியாவின் ஒரு யூனியன் பிரதேசமாக** இருந்தது.

34) மணிப்பூர் மாநிலத்திலுள்ள **டைலாங் கிராமம், பல்லுயிர் பாரம்பரிய தலமாக அம்மாநில அரசால்** அறிவிக்கப்பட்டுள்ளது.

35) ரிவாஜா பாண்ட் என்ற பெயரிலான **மத்திய அரசின் திறந்தவெளி கழிப்பறை முறைக்கு முடிவிற்கு கொண்டு வருவதற்கான திட்டத்திற்கு அமிதாப்பச்சன் விளம்பர தூதுவராக** நியமிக்கப்பட்டுள்ளார்.

36) நாட்டிலேயே 2வது பெரிய தேசியக் கொடிக் கம்பம் **மகாராஷ்டிரத்தின் கொல்காப்பூர்** நகரில் திறந்து வைக்கப்பட்டது. முதல் பெரிய தேசியக் கொடிக்கம்பம் பஞ்சாப் மாநிலம் அட்டாரியில் இந்தியா – பாகிஸ்தான் எல்லையொட்டி அமைக்கப்பட்டுள்ளது.

37) **ஆனந்நாக் இடைத்தேர்தலை காஷ்மீரில் நிலைமை சரியில்லை என கூறி தேர்தல் ஆணையம் ரத்து** செய்துள்ளது.

38) இராமானுஜரின் 1000-வது அவதார தினவிழா சிறப்பாக கொண்டாடப்படுவதால் அவரின் திருவுருவம் பொறித்த தபால்தலை **01-05-2017 அன்று பிரதமர் மோடி** அவர்களால் டெல்லியில் வெளியிடப்பட்டது.

39) அரசு அலுவலகங்களில் எல்.இ.டி.பல்பு பயன்படுத்துவதை ஜூன் மாத முதல் பார்வையற்றோருக்கான **கால்பந்து பயிற்சி அகாதெமி கேரளாவில்** அமைய உள்ளது.

40) இந்திய ஊழல் அறிக்கை 2017 : -
மத்திய அரசின் ஊடக படிப்புகளுக்கான மையம் வெளியிட்ட அறிக்கையில் இந்தியாவில் ஊழல் அதிகமாக உள்ள மாநிலம் **கர்நாடகம்.**
இரண்டாவது இடம் **ஆந்திரபிரதேசம்**
மூன்றாவது இடம் **தமிழ்நாடு**

41) **"தானியங்கி காலநிலை கட்டுப்பாட்டு மையங்களை"** பயன்படுத்தும் முதல் இந்திய மாநிலம் **மகாராஷ்டிரா** பெற்றுள்ளது.

42) இந்திய நகரங்களில் தொழில் முனைவுகளை ஊக்குவிப்பதற்காக **"Solve for India" விழிப்புணர்வு பிரச்சாரத்தை "கூகுள் நிறுவனம்"** மேற்கொண்டுள்ளது.

43) இந்தியாவில் புதிய **"தொழிற்துறை தயாரிப்பு பட்டியல்" 2011-2012 ஆண்டை அடிப்படையாக வைத்து கணக்கிடப்பட** உள்ளது.

44) மத்திய அரசு அளித்துள்ள புள்ளிவிபரத்தின்படி **2015-ம் ஆண்டில் விவசாயிகள் தற்கொலையில் முதலிடம் - மகாராஷ்டிரா, ஏழாமிடம் - தமிழகம்.**

45) ஜி.எஸ்.டி-யை அமல்படுத்தும் மாநிலங்களில் **உத்திரபிரதேசம் 5-வது மாநிலம்.**

46) **ஹம்சாபர் சூப்பர் பாஸ்ட் வாராந்திர ரயில் சென்னை சென்ட்ரலிலிருந்து குஜராத் மாநிலம் அகமதாபாத்திற்கு** இரயில் அறிமுகம் செய்யப்பட்டது.

47) **அசாம் மாநிலம் முழுவதும் பதற்றமடைந்த பகுதியாக மத்திய அரசு** அறிவித்துள்ளது.

48) மிகத்தூய்மையான நகரங்களின் பட்டியல் 2017 : -
இந்தியாவில் மத்தியப் பிரதேச மாநிலத்தின் **"இந்தூர் நகரம்" இந்தியாவின் மிகத் தூய்மையான நகரமாக** தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.
**இரண்டாவது மிகத்தூய்மையான நகரம் போபால்** தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

49) **மிக அசுத்தமான நகரம் உத்திரப்பிரதேசத்தின் "கோண்டா" நகரம்** பெற்றுள்ளது.

50) தூய்மையான நகரங்களின் பட்டியலில் **தமிழ்நாட்டின் திருச்சி 6-வது இடத்தையும், கோயம்புத்தூர் 16-வது** இடத்தையும் பிடித்துள்ளது.

51) மகாராஷ்டிர மாநிலம், நாசிக் மாவட்டத்தில் உள்ள **குந்தேவாதி கிராமம், திறந்தவெளி கழிப்பறை இல்லா கிராமமாக தேர்வு** செய்யப்பட்டுள்ளது.

52) அரசியலமைப்பு ஆணை சட்டம் 2017-ன் படி ஒடிஷா மாநிலத்தைச் சேர்ந்த **சுயால்கிரி (ம) ஸ்வால்கிரி ஆகிய ஜாதியினர்** பட்டியல் இனத்தவர்களாக அறிவிக்கப்பட்டுள்ளனர்.

53) **"தி ஹைவே சாகா" மற்றும் ஷ்ரிஷ்டி** எனப்படும் இரு சாலை வழி கண்காட்சிகளை **நிதின் கட்காரி** துவக்கி வைத்தார்.

54) ஆந்திரபிரதேசத்திலுள்ள **விஜயவாடா உள்நாட்டு விமானநிலையம், "சர்வதேச விமான நிலையமாக"** தரம் உயர்த்தப்பட்டுள்ளது.

55) மனிதர்கள் அடுத்த நூற்றாண்டுகளுக்குள் பூமியை விட்டு வெளியேறி இன்னொரு கோளில் **காலனிகளை உருவாக்க வேண்டுமென இயற்பியல் ஆராய்ச்சியாளர் "ஸ்டீபன் ஹாக்கின்ஸ்"** எச்சரிக்கை விடுத்துள்ளார்.

56) இந்தியாவின் **முதல் தனியார் சிறு ஆயுத தயாரிப்பு தொழிற்சாலை மத்திய பிரதேச மாநிலத்திலுள்ள மலானாப்பூரில்** துவங்கப்பட்டுள்ளது.
இந்தியாவைச் சேர்ந்த **"பஞ்ச் இல்லாய்"** என்ற நிறுவனத்திற்கும், இஸ்ரேல் நாட்டைச் சேர்ந்த **"இஸ்ரேல் வெப்பண் சிஸ்டம்"** என்ற நிறுவனத்திற்குமான கூட்டு முயற்சியில் உருவானது.

57) **பேஷ்புக் நிறுவனம் இந்தியாவில் "Express Wifi"** எனும் பெயரிலான இணையதள சேவையை துவங்கியுள்ளது.

58) பங்கனபள்ளி **மாம்பழத்திற்கான புவியியல் குறியீடு சான்றிதழ் ஆந்திர பிரதேச அரசிற்கு** வழங்கப்பட்டுள்ளது.

59) மத்திய சாலை போக்குவரத்து அமைச்சகத்தின் ஒருங்கிணைந்த **போக்குவரத்து மற்றும் லாஜிஸ்டிக் கூடுகை 2017 புது தில்லியில்** நடைபெற்றது.

60) மல்யுத்த வீரர் கேப்டன் **சந்த்ரூப்** சமீபத்தில் மரணமடைந்தார்.

61) மத்திய பிரதேச சட்டசபையில் **நர்மதா நதியை** உயிருள்ள ஒன்றாக அறிவித்து தீர்மானம் இயற்றப்பட்டது.

62) இங்கிலாந்து நாட்டின் 2017-ம் ஆண்டிற்கான மிகப்பெரும் பணக்காரர்களின் பட்டியலில் **இந்தியர்களான "இந்துஜா சகோதரர்கள்"** முதலிடம் பெற்றுள்ளனர்.

63) இந்தியாவில் பிறந்து வெளிநாடு வாழ் அறிவியலறிஞர்களான **கிருஷ்ணா சாட்டர்ஜி, சபாஷ்கோட்சயத்வீந்தர் மால்கி** ஆகியோருக்கு **உலகின் மிகப்பெரிய அறிவியலறிஞர்களுக்கான அங்கீகாரமான "இங்கிலாந்து ராயல் சொசைட்டி பெல்லோ"** வழங்கப்பட்டது.

தற்போது **இங்கிலாந்து ராயல் சொசைட்டியின் தலைவராக உள்ளவர் வெங்கட்ராமன் இராமகிருஷ்ணன்.**

64) அனைத்து வீடுகளுக்கும் மின்சாரம் வழங்கும் மாநிலங்களில் **குஜராத், ஆந்திராவை அடுத்து கேரளா** இணைய உள்ளது.

65) நாட்டின் முதல் **உயர்நீதிமன்ற பெண் நீதிபதியான லீலாசேட்** காலமானார். இவர் **தில்லி உயர்நீதிமன்றத்தின் முதல் பெண் நீதிபதி** ஆவார். **இவரின் சுயசரிதை "ஆன் பேலன்ஸ்"** ஆகும்.

66) மத்திய நேரடி வரி வாரியத்தின் தலைவராக பதவி வகித்து வரும் **சுஷில் சந்திராவிற்கு ஓராண்டு பதவி** நீட்டித்துள்ளது.

67) ஆசிய அளவில் **ஊழலில் ஊறிப்போன நாடுகளின் பட்டியலில் "இந்தியா"** முதலிடம்.

68) இந்தியாவின் முதல் **"உயிரி எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையை" மகாராஷ்டிர மாநிலம் பூனேவில் மத்திய சாலைப் போக்குவரத்து அமைச்சர் நிதின் கட்கரி** துவக்கி வைத்தார்.

69) ஐக்கிய நாடுகளின் **மனிதக் குடியிருப்புச் செயற்றிட்டம் என்ற ஐக்கிய நாடுகளவையின் கீழ் செயல்படும் அமைப்பின் தலைமைப் பொறுப்பிற்கு இந்தியா** தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

70) **பிஷீபர்வ - ஜார்க்கண்ட் மாநிலத்தில் நடைபெற்ற வேட்டைத் திருவிழா** ஆகும்.

71) இந்தியாவைப் பூர்வீகமாக கொண்ட புகழ்பெற்ற **பாகிஸ்தானிய கித்தார் இசைக் கலைஞர் உஸ்தாத் ராய்ஷ் கான்** மரணமடைந்துள்ளார்.

72) வாக்காளர்கள் தங்கள் பல்வேறு சந்தேகங்களை தெளிவுபடுத்திக் கொள்வதற்காக **தேசிய தொடர்பு மையம் எனும் இலவச தொலைபேசி எண்** : 1800111950 – **ஐ மத்திய தேர்தல் ஆணையம்** அறிமுகப்படுத்தியுள்ளது.

73) திருநங்கையினரை பணியிலமர்த்திய இந்தியாவின் முதல் மெட்ரோ ரயில் நிறுவனம் என்ற பெருமையினை **"கொச்சி மெட்ரோ நிறுவனம்"** பெற்றுள்ளது.

74) பூமி பூஜைத் திருவிழா **பூமித்தாயின் பெருமையை பறை சாற்றும் விதமாக சாஹுவா என்ற திருவிழா சிக்கிம் மாநிலத்தில்** நடைபெற்றது.

<u>நியமனங்கள் :-</u>

1) Controller general of Accounts – ஆந்தோணி லியான்சுலா.

2) இந்திய தொழிற்சாலைகளின் கூட்டமைப்பு அமைப்பின் **முதல் பெண் தலைவராக அப்போலோ மருத்துவமனை குழுமத்தின் துணைத்தலைவராக இருக்கும் "ஷோபனா காமினேனி"** நியமிக்கப்பட்டுள்ளார்.

3) நாடாளுமன்ற பொதுக் கணக்கு குழுவின் தலைவராக **மக்களவை காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுனா கார்கே** நியமிக்கப்பட்டுள்ளார்.

4) மாநில **குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணைய தலைவராக எம்.பி.நிர்மலா** தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

5) **7 பொதுத்துறை வங்கியின் நிர்வாக இயக்குநர்கள், தலைமைச் செயல் அதிகாரிகளை மத்திய அரசு நியமனம்** செய்துள்ளது.

இந்தியன் ஓவர்சீஸ் வங்கியில் தற்போது செயல் இயக்குநராக உள்ள **ஆர்.சுப்பிரமணிய குமார்** அதே வங்கியின் நிர்வாக இயக்குநர், தலைமைச் செயல் அதிகாரியாக நியமிக்கப்படுகிறார்.

கார்ப்பரேசன் வங்கியின் செயல் இயக்குநரான **சுனில் மேத்தா, பஞ்சாப் நேசனல் வங்கியின் நிர்வாக இயக்குநர், தலைமைச் செயல் அதிகாரியாக** நியமிக்கப்படுகிறார். தற்போது அப்பொறுப்பில் உள்ள **உஷா அனந்த சுப்ரமணியன் அலகாபாத் வங்கியின் நிர்வாக இயக்குநர், தலைமைச் செயல் அதிகாரி** பொறுப்புக்கு மாற்றப்படுகிறார்.

ஓரியண்டல் பேங்க் ஆ.ஃப் காமர்ஸ் வங்கியின் தற்போதைய செயல் இயக்குநரான **ராஜ்கிரண் யூனியன் பேங்க் ஆப் இந்தியாவின் புதிய நிர்வாக இயக்குநர், தலைமைச் செயல் அதிகாரியாக** பொறுப்பேற்பார்.

பேங்க் ஆ.ஃப் இந்தியாவின் **நிர்வாக இயக்குநர், தலைமைச் செயல் அதிகாரியாக தீனபந்து மஹாபாத்ரா** நியமிக்கப்படுகிறார். தற்போது, அந்தப் பதவியில் உள்ள **எம்.ஓ.ரீகோ சிண்டிகேட் வங்கியின் நிர்வாக இயக்குநர், தலைமைச் செயல் அதிகாரியாக** பொறுப்பேற்பார்.

பேங்க் ஆ.ஃப் இந்தியாவில் செயல் இயக்குநராக இருக்கும் **ஆர்.ஏ.சங்கரநாராயணன், விஜயா வங்கியின் நிர்வாக இயக்குநர், தலைமைச் செயல் அதிகாரியாக** நியமிக்கப்படுகிறார்.

6) இந்திய **சமூக அறிவியல் ஆராய்ச்சி கவுன்சிலின் தலைவராக "பிராஜ் பிகாரி குமார்"** நியமிக்கப்பட்டுள்ளார்.

7) இந்திய **தேயிலை வாரியத்தின் தலைவராக பிரபாத் கமல் பெஷ்போரா** நியமிக்கப்பட்டுள்ளார்.

8) சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு **புதிய தலைவராக ஓய்வு பெற்ற வனத்துறை அதிகாரி என்.கிருஷ்ணகுமார்** நியமிக்கப்பட்டுள்ளார்.

9) கோக-கோலா இந்தியா மற்றும் தென்மேற்கு ஆசியாவின் தலைவராக **தமிழகத்தை சேர்ந்த திருமலை கிருஷ்ண குமார்** நியமிக்கப்பட்டுள்ளார்.

10) தமிழகம் மற்றும் புதுச்சேரி பிராந்தியத்திற்கான **அக்கவுன்டன்ட் ஜெனரல் என்றழைக்கப்படும் புதிய முதன்மை கணக்கு தணிக்கை அலுவலராக தேவிகா நாயர்** நியமிக்கப்பட்டுள்ளார்.

11) இந்தியாவிற்கான **பாகிஸ்தான் ஹைகமிஷனராக சொகாயில் மக்முத்** நியமிக்கப்பட்டுள்ளார்.

12) இந்தியாவின் **இராணுவத்துறை செயலராக சஞ்சய் மித்ரா** நியமிக்கப்பட்டார்.

13) சர்வதேச கால்பந்து கூட்டமைப்பின் ஆட்சிக் குழுவின் தலைவராக **இந்தியாவின் ஓய்வு பெற்ற நீதிபதி "முகுல் முத்கல்"** தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

**அறிவியல் மற்றும் தொழில்நுட்பம் :-**

1) **வெப்பமெடுத்தல், தொழில்நுட்பத்திற்கான இந்தியரும் முதல் அகச்சிவப்பு சென்ஸார்களை உருவாக்கி ஐஐடி மும்பை சாதனை** படைத்துள்ளது.

2) தமிழக மாணவர் **ரி.்.பாத் ஷாருக் வடிவமைத்த உலகின் மிகச்சிறிய செயற்கைக் கோளை நாசா விண்ணில்** செலுத்துகிறது.

3) **"ரான்சம்வேர்" கம்ப்யூட்டர் வைரஸ் தாக்குதலை தடுத்து நிறுத்தும் முறைமையை இங்கிலாந்தைச் சேர்ந்த 22 வயதான மார்கஸ் ஹட்சின்ஸ் எனும் சைபர் பாதுகாப்பு நிபுணர்** கண்டுபிடித்துள்ளார்.

4) **"சினோ கிராப்பஸ்" என்ற கடல் நண்டுகளின் ஓடுகளில் இருந்து தயாரிக்கப்படும் திரவம், மலேரியா நோயை பரப்பும் கொசுக்களை** ஆரம்ப நிலையிலேயே அழிக்கிறது.

5) **இந்தியாவின் முதல் அதிவிரைவு (ம) அதிநவீன "தேஜாஸ் ரயில் சேவை 22.05.2017"** அன்று தொடங்கப்பட்டது.

6) அமெரிக்க விண்வெளி ஆய்வு மையம் தனது அமைப்பு கண்டுபிடித்துள்ள புதிய நுண்ணுயிரிக்கு **"சோலிபேசில்லஸ் கலாமி" என இந்திய முன்னாள் குடியரசுத் தலைவர் ஏ.பி.ஜே.அப்துல் கலாம் பெயரைச்** சூட்டி கௌரவித்துள்ளது.

7) உலக **மருத்துவ தரவரிசைப் பட்டியலில் இந்தியா 154-வது இடம்** வகிக்கிறது.

8) மனிதனை விண்வெளிக்கு சுமந்து செல்லும் திறன் கொண்ட **"குண்டு பையன்" எனப் பெயரிடப்பட்டுள்ள ஜி.எஸ்.எல்.வி.மார்க் 3 ராக்கெட் ஜூன் 5-ம் தேதி** ஏவப்படுகிறது.

9) உலகில் முதல் முறையாக **"எரியக் கூடிய பனிக்கட்டி" என அழைக்கப்படும் "மீத்தேன் ஹைட்ரேட் வாயு" எனும் புதிய எரிபொருளை சீன பொறியாளர்கள்** கண்டுபிடித்துள்ளனர்.

10) "நவ்காம் ஆப்ரேஷன்"
காஷ்மீர் மாநிலம், நவ்காம் செக்டாரையொட்டி உள்ள **எல்லை கட்டுப்பாட்டு கோட்டு பகுதியில் ஊடுருவிய 2 பயங்கரவாதிகள் சுட்டுக் கொல்லப்பட்டனர். இத்திட்டம் "நவ்காம் ஆப்ரேஷன்"** ஆகும்.

11) "காராவாலி காருண்யா"
பேரிடர் காலங்களில் **மனிதாபிமான உதவிகளை மேற்கொள்வதற்கான இந்திய கடற்படையினரால் நடத்தப்படும் வருடாந்திர பயிற்சி** ஆகும்.

12) கங்கை நதி வண்டல் மண் குறைப்பதற்கான குழு 2016 ஜூன் மாதம் மாதம் சிஷாலே என்பவர் தலைமையில் மத்திய நீர்வளத்துறையால் அமைக்கப்பட்டது. இக்குழு தனது அறிக்கையை மத்திய அரசிடம் ஒப்படைத்தது.

13) சாரண - சாரணிய இயக்கம் பற்றி அமைக்கப்பட்ட ஹர்ஸ் மல்கோத்ரா தலைமையில் அமைக்கப்பட்ட **7 நபர் கொண்ட குழு தனது அறிக்கையை மத்திய இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் விஜய் கோயலிடம்** சமர்ப்பித்துள்ளது.

14) **இந்தியா (ம) ஜெர்மன் நாடுகளுக்கிடையே மாற்று மருத்துவத்தில் பரஸ்பர ஒத்துழைப்பிற்கான கூட்டு பிரகடனம்** கையெழுத்தாகியுள்ளது.

15) கோயா பாயா : காணாமல் போன குழந்தைகளை கண்டறிவதற்கான இணையதளம் (www.khoyopaya.gov.in)

16) மியான்மரில் ரோஹிங்கியா **முஸ்லீம்களுக்கு எதிரான கலவரங்களை விசாரிக்கும் ஐ.நா.குழுவிற்கு இந்தியாவைச் சேர்ந்த உச்சநீதிமன்ற வழக்கறிஞர் இந்திரா ஜெய்சிங்** நியமிக்கப்பட்டுள்ளார்.

17) நுகர்வோர் புகார் தெரிவிக்க **இந்தியாவிலேயே முதன்முறையாக தமிழகத்தில் "டி.என்.எல்.எம்.சி.டி.எஸ்"** என்ற புதிய செயல் ஆறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

18) Slam Bharat 17 தாய்லாந்தின் சியாங் மாய் நகரில் நடைபெற்ற **இந்தியா (ம) தாய்லாந்து விமானப்படைகளின் பேரிடர் மேலாண்மை (ம) மனிதாபிமான உதவிகளை வழங்குவதற்கான கூட்டு ராணுவப் பயிற்சி GSAT 9 என்ற செயற்கைக்கோள் ஜி.எஸ்.எல்.வி MIK-II என்ற ஏவுகணையின் மூலம் சார்க் நாடுகளுக்காக ஸ்ரீஹரிகோட்டாவிலுள்ள சதீஷ் தவான் விண்வெளி மையத்திலிருந்து மே 5-ம் தேதி** விண்ணில் ஏவப்பட்டது.

19) நாவல் பழத்திலிருந்து மிகக் குறைந்த செலவிலான சூரிய சக்தி செல்களை தயாரிக்கும் முறையை ஐ.ஐ.டி. ரூர்க்கேவிலுள்ள ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

20) பிரமோஸ் ஏவுகணை சோதனை வெற்றி : தரையில் இருந்து கிளம்பிச் சென்று தரையில் உள்ள இலக்கை தாக்கி அழிக்கும் **பிரமோஸ் ஏவுகணையில் பிளாக்-3 என்னும் வரிசையைச் சேர்ந்த தரம் சூப்பர்சானிக் ஏவுகணை சோதனையை, இந்திய இராணுவம் அந்தமான் நிக்கோபார் தீவுகளில்** வெற்றிகரமாக நடத்தியது.

21) சீனாவின் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட **முதல் ஜெட் விமானம் 158 பேர் அமரக் கூடிய "சி-919"** எனும் பெயர் கொண்ட இந்த விமானம் தனது சோதனை ஓட்டத்தை நடத்தியது.

22) ரஷ்யா சதந்-2 எனக் குறிக்கும் வகையில் **"RS-28 சர்மத" என்ற உலகின் கனமான மற்றும் சக்திவாய்ந்த ஏவுகணையை ரஷ்யா** தயாரித்துள்ளது.

23) அக்னி – 2 :- அணு ஆயுதங்களைத் தாங்கி செல்ல இந்த ஏவுகணை ஒடிஸா மாநிலம் பலாசூரில் வெற்றிகரமாக சோதிக்கப்பட்டது.

24) உலகிலேயே மிகப்பெரிய எக்ஸ்ரே லேசர் கருவி **"யூரோப்பியன் XFEL" ஜெர்மணியில்** உள்ளது.

25) EVIN – Electronic Vaccine Intelligence Network.
இந்திய அரசு உருவாக்கியுள்ள ஆன்லைன் நிகழ்நேர தடுப்பூசி மேலாண்மை முறை.

**விருதுகள் :-**

1) வர்த்தக துறையில் வளரும் தலைவர் விருது -
**ஹாவல்ஸ் நிறுவன தலைவர் அனில்ராய் குப்தா.**

2) யுனெஸ்கோ/குல்லெர்மோ கானோ உலக பத்திரிக்கை சுதந்திர பரிசு 2017 -
**டாவிட் இஸாக் (எரித்ரியா – சுவீடன் நாட்டு பத்திரிக்கையாளர்).**

3) Hero of the league 2016 – 17 Award -
இந்திய கால்பந்து வீரர் சுனில்சேத்ரி என்பவருக்கு வழங்கப்பட்டது.

4) இந்திய மாதர் சங்கத்தின் தலைவர் **பத்மா வெங்கட்ராமனுக்கு 2017-ம் ஆண்டிற்கான "அவ்வையார் விருது"** வழங்கப்பட்டது.

5) பியூச்சர் (Feature) பிலிம் பிரிவில் **வாகை சூடவா திரைப்படத்திற்கு பிரெஞ்ச் திரைப்பட விழாவில் விருது** வழங்கப்பட்டது.

6) Hero of the league 2017 Award -
பெங்களூரைச் சேர்ந்த **கால்பந்து வீரர் சுனில் சேத்திரி** பெற்றுள்ளார்.

7) தென்கொரியா நாட்டின் தூதரக சேவைகளுக்கான சுங்னா தகுதி விருது - இந்திய தொழிலதிபர் ராஜீவ் கவுல்க்கு வழங்கப்பட்டுள்ளது.

8) விஸ்டன் 2016 – சிறந்த கிரிக்கெட் புகைப்படக் கலைஞராக இந்தியாவின் **ஜம்மு காஷ்மீர் மாநிலத்தைச் சேர்ந்த சாகிப் மஜீத்** பெற்றுள்ளார்.

9) **சிறந்த மனித நேயருக்கான ஆசிய விருது ஜாக் பிரெகருர் பெற்றுள்ளார். இவர் மேற்கு வங்க மக்களால் ஏழைகளின் மருத்துவர்** என அழைக்கப்படுகிறார்.

10) ஏழாவது ஆசிய விருதுகள் வழங்கும் நிகழ்வில் சினிமாத்துறைக்கு மிகச்சிறந்த பங்களிப்பை வழங்கியதற்**கான மிகச் சிறந்த சாதனையாளர் விருது இந்திய நடிகர் "ஓம் பூரி"** அவர்களுக்கு அறிவிக்கப்பட்டது.

11) கோவை அருகே வெள்ளியங்கி மலையடிவாரத்தில் உள்ள **ஈஷா யோகா மையத்தில் 112 அடி ஆதியோகி சிலையை உலகிலேயே மிகப்பெரிய மார்பளவு சிலையாக கின்னஸ் புத்தகம்** அங்கீகரித்துள்ளது.

12) பொதுச் சேவைகளுக்கான **பைரான் சிங் சேகாவத் வாழ்நாள் சாதனை கௌரவம் 2017 – சிக்கிம் முதலமைச்சர் ஸ்ரீபவன் குமார் சம்லிங் அவர்களுக்கும், குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜி** வழங்கியுள்ளார்.

13) 2017-ம் ஆண்டிற்கான ஸ்மார்ட் நகரங்களுக்கான விருதுகளில் **சிறந்த ஸ்மார்ட் கிராமத்திற்கான விருது "கோவர்த்தன் ஈகோ வில்லேஜ்"-க்கு** வழங்கப்பட்டுள்ளது.

14) இந்திய அறிவியலறிஞர் **ஸ்ரீனிவாஸ் குல்கர்னி அறிவியல் துறையில் புகழ்பெற்ற 'டான்டேவிட்'** பரிசை வென்றுள்ளார். **'Future' என்ற பிரிவில் தனது வானியல் தொடர்பான ஆராய்ச்சிகளுக்காக** பெற்றார்.

15) பசுமை ஆஸ்கார் (அ) விட்லே விருது 2017 :-
இந்திய சுற்றுசூழல் ஆர்வலர்களான, கர்நாடகாவைச் சேர்ந்த **சஞ்சய் குப்பி (ம) அஸ்ஸாமைச் சேர்ந்த "பூர்ணிமா தேவி வர்மன்"** ஆகியோர் பெற்றனர்.

16) கேன்ஸர் நோய் பற்றிய ஆராய்ச்சிக்காக, **இந்திய தேசிய அறிவியல் கழகத்தின் 'INSA' இளம் விஞ்ஞானி விருது 2017" டாக்டர்.அரவிந்த் குமார் ரெங்கன்** என்பவருக்கு வழங்கப்பட்டது.

17) அருணாச்சலப் பிரதேசத்தை சேர்ந்த **மலை ஏறும் வீராங்கனை "அன்சுஜாம் சென்பா" எவரெஸ்ட்டில் 4-வது முறையாக ஏறி** சாதனைப் படைத்துள்ளார்.

18) இஸ்ரேல் விருது :-
அமெரிக்காவில் கலிபோர்னியா மாகாணம், பசடேனாவில் கலிபோர்னியா தொழில் நுட்ப கல்வி நிறுவனத்தில் பேராசிரியராக பணியாற்றி வருபவர், **இந்திய விஞ்ஞானி சீனிவாஸ் குல்கர்னி, வர்சா பல்கலைக் கழகத்தின் ஆனட்ரெஜ் உதால்ஸ்கை, நாசாவின் நீல் கேஹ்ரல்ஸ் ஆகிய 3 பேருக்கும், இஸ்ரேல் நாட்டின் "டேன் டேவிட்" விருது கூட்டாக** வழங்கப்படுகிறது.

19) ஐக்கிய நாடுகளவையின் அமைதிப்படையில் பணிபுரிந்து **வீரமரணமடைந்த பிரிஜேஷ் தாபா மற்றும் ரவிகுமார் ஆகியோருக்கு ஐ.நா.வின் "டாக் ஹாம்மர்ஸ் ஜோல்டு விருது"** அறிவிக்கப்பட்டது.

20) இயற்கைக்கான உலகளாவிய நிதியகத்தின் **சர்வதேச பிரசிடெண்ட் விருது இந்தியாவைச் சார்ந்த ரோஹன் சக்ரவர்த்தி எனப்படும் சுற்றுசூழல் கார்ட்டூன் கலைஞருக்கு** வழங்கப்பட்டுள்ளது.

21) ஆதித்தனார் இலக்கிய பரிசு 2016 :-
தமிழர் தந்தை அமரர் சி.பா.ஆதித்தனார் நினைவாக தமிழுக்கு அருந்தொண்டாற்றி வரும் மூத்த தமிழ் அறிஞர் ஒருவருக்கு **மூத்த தமிழ் அறிஞர் விருதும், சிறந்த இலக்கியத்திற்கு விருதும்** வழங்கப்பட்டு வருகிறது. **முனைவர் அருகோவிற்கு மூத்த தமிழ் அறிஞருக்கான விருதும், "அவ்வையார் படைப்புக் களஞ்சியம்" என்ற நூலை எழுதிய முனைவர் தாயம்மாள் அறவாணவருக்கு சிறந்த இலக்கியத்திற்கான பரிசும்** கிடைத்தது.

22) **"CEAT 2017" சிறந்த சர்வதேச கிரிக்கெட் வீரர் விருது ரவிச்சந்திரன் அஸ்வினுக்கு** கிடைத்தது.

23) தாதாசாகேப் பால்கே அகடெமி விருதுகளில் புதிதாக சேர்க்கப்பட்டுள்ள **சர்வதேச அளவில் பாராட்டப்பட்டுள்ள நடிகை பிரிவுக்கான விருது பாலிவுட் நடிகை பிரியங்கா சோப்ராவிற்கு** அறிவிக்கப்பட்டுள்ளது.

24) ஸ்மார்ட் போலீஸ் விருது 2017 :-
**இந்திய வர்த்தக கூட்டமைப்புகளுக்கு வழங்கும் இந்த விருது பூனே நகர காவல்துறைக்கு** வழங்கப்பட்டது.

25) சங்கீத நாடக அகதெமி புரஸ்கார் 2016 :-
**ஹைதராபாத் பல்கலைக்கழகத்தில் பணியாற்றும் பேராசிரியர் சத்யபிரதா ராவுத் என்பவருக்கு** வழங்கப்பட்டது.

**விளையாட்டு :-**

1) பார்சிலோனா ஓபன் 2017 : -
இடம் : **ஸ்பெயினின் பார்சிலோனா**
சாம்பியன் : **ரபேல் நடால், ஆஸ்திரியாவின் டொமினிக் தீமை தோற்கடித்தார்.**

2) டல்ஹாஸீ ஏடிபி சேலஞ்சர் டென்னிஸ் இரட்டையர் பிரிவு நடைபெற்ற இடம் - **அமெரிக்காவின் டல்ஹாஸீ**

வெற்றி பெற்றவர்கள் - **இந்தியாவின் லியாண்டர் பயஸ் அமெரிக்காவின் ஸ்காட் லிப்ஸ்கி. அர்ஜென்டினாவின் லியாணார்டோ மேயர் - மேக்ஸிமா கொன்ஸாலெஸ் ஜோடியைத் தோற்கடித்தனர்.**

3) தென்மண்டல சீனியர் வாலிபால் ஆடவர் பிரிவு : -
இடம் : **புதுச்சேரி**
சாம்பியன் : **தமிழகம்**
மகளிர் பிரி சாம்பியன் : **கர்நாடகம்.**

4) உலக **ஸ்னூக்கர் சாம்பியன்சிப் போட்டி 2017 – மார்க் செல்பி (இங்கிலாந்து)** பட்டம் வென்றார்.

5) **ஐசிசியின் டி20 அணிகளுக்கான தரவரிசைப்பட்டியலில் இந்திய அணி 4-வது இடம் பிடித்துள்ளது. நியூசிலாந்து முதலிடம் பிடித்துள்ளது.**

6) சர்வதேச கால்பந்து தரவரிசையில் **இந்திய அணி 100-வது இடம்** பிடித்துள்ளது. **முதலிடத்தில் பிரேசில் நாடு** உள்ளது.

7) அஸ்லான் ஷா கோப்பை ஹாக்கி : -
மலேசியாவின் ஈபோ நகரில் நடைபெற்ற இறுதிச் சுற்றில் **பிரிட்டன் அணி ஆஸ்திரேலியாவை தோற்கடித்து சாம்பியன் பட்டம்** வென்றது. இதில் **இந்திய அணி வெண்கலப் பதக்கம்** வென்றது.

8) ஆசிய குத்துச்சண்டை : -
உஸ்பெகிஸ்தான் தலைநகர் தாஷ்கண்டில் நடைபெற்ற இப்போட்டியில் **இந்திய வீரர்கள் சிவதாபா (60 கிலோ), சுமித் சங்வான் (91 கிலோ) ஆகியோர் வெள்ளிப் பதக்கம்** வென்றனர்.
ஆசிய **குத்துச் சண்டைப் போட்டியில் சிவதாபா மூன்று முறை தொடர்ச்சியாக பதக்கம்** வென்றவர் ஆவார்.

9) இந்திய கிரிக்கெட் வீராங்கனை **ஜீலன் கோஸ்வாமி ஒரு நாள் போட்டியில் அதிக விக்கெட்டுகள் (181) வீழ்த்தியவர் என்ற புதிய உலக சாதனையை** படைத்துள்ளார்.

10) **மிஸ் கூவாகம் 2017 போட்டியில் சென்னையை சேர்ந்த ஆன்ட்ரியா சென்** முதலிடம் பிடித்துள்ளார்.

11) ஒடிசா மாநிலம் புவனேஸ்வரில் வரும் **ஜூலை 2017-ல் நடைபெற உள்ள 22-வது ஆசிய தடகள சாம்பியன்ஷிப் போட்டிகளின் அடையாளச் சின்னமாக ஆலிவ் ரிலி ஆமைகள்** அறிவிக்கப்பட்டுள்ளன.

12) டில்லியில் நடைபெற்ற ஆசிய மல்யுத்த சாம்பியன்ஷிப் போட்டியில் இந்திய வீராங்கனைகள் **சாஷிமாலிக் 60 கிலோ எடைப் பிரிவு, வினேஷ் போகத் (55 கிலோ எடைப் பிரிவு) வெள்ளிப் பதக்கம்** வென்றுள்ளனர்.

13) ஆசிய மல்யுத்த சாம்பியன்ஷிப் போட்டியில் **ஆடவர் 65 கிலோ ஃபிரீஸ்டைல் பிரிவில் இந்திய வீரர் பஜ்ரா பூனியா தங்கப் பதக்கம்** வென்றார். **மகளிர் 58 கிலோ எடைப் பிரிவில் இந்திய வீராங்கனை சரிதா வெள்ளிப் பதக்கம்** வென்றுள்ளனர்.

14) ஆசிய மல்யுத்த போட்டியில் **இந்திய வீரர் சுமித் வெள்ளிப் பதக்கம்** வென்றார்.

15) லண்டனிலுள்ள பழம்பெரும் "மேரில் போன் கிரிக்கெட் கிளப் (MCC) " - இன் கௌரவ வாழ்நாள் உறுப்பினர் அந்தஸ்து இந்திய கிரிக்கெட் வீரர் VVS.லக்ஷ்மண் என்பவருக்கு வழங்கப்பட்டுள்ளது.

16) ஸ்பானிஷ் கிராண்ட் பிரிக்ஸ் கார் பந்தையப் போட்டியில் **இங்கிலாந்தின் கார் பந்தைய வீரர் லீவிஸ் ஹேமில்டன்** வெற்றி பெற்றுள்ளார்.

17) மாட்ரிட் மாஸ்டர்ஸ் டென்னிஸ் போட்டியில் **ஸ்பெயினின் ர.ஃபேல் நடால் 5-வது முறையாக சாம்பியன் பட்டம்** வென்றார்.

18) தென்னாப்பிரிக்காவில் நடைபெற்று வரும் 4 நாடுகள் மகளிர் கிரிக்கெட் தொடரில் இந்திய இணி அயர்லாந்தைத் தோற்கடித்தது.

**தீப்தி சர்மா, பூனம் ரெவளத் ஜோடி முதல் விக்கெட்டுக்கு 45.3 ஓவர்களில் 320 ரன்கள் குவித்தது. சர்வதேச அளவில் ஒரு விக்கெட்டுக்கு அதிக ரன்கள் குவித்த ஜோடி** என்ற உலக சாதனையைப் படைத்தது.

19) மொனாக்கோவில் நடைபெற்ற **பிரெஞ்ச் லீக் 1 கால்பந்து போட்டியில் மொனாக்கோ அணி கடந்த 17 ஆண்டுகளில் முதன்முறையாக சாம்பியன் பட்டம்** வென்றுள்ளது.

20) சீனத் தலைநகர் பெய்ஜிங்கில் ஆசிய பிட்ஸ் சாம்பியன்ஷிப் செஸ் போட்டியில் **சென்னையைச் சேர்ந்த வீராங்கனை வைஷாலி தங்கப் பதக்கம்** வென்றார்.

21) உலகக் கோப்பை வில்வித்தை தொடர் :-
**அபிஷேக் வர்மா, ராஜு ஸ்ரீதர், அமால்ஜித் சிங் ஆகியோர் அடங்கிய இந்திய ஆடவர் அணி கொலம்பியாவைத் தோற்கடித்து தங்கம்** வென்றுள்ளது.

22) 7-வது சர்வதேச முதியோர் தடகள சாம்பியன்ஷிப் **திருச்சியைச் சேர்ந்த அண்ணாவி 50-54 வயது பிரிவு வட்டு, ஈட்டி எறிமுதல் மற்றும் குண்டு எறிதல் ஆகிய 3 போட்டிகளில் தங்கம்** வென்றுள்ளார்.

23) ஐ.பி.எல்.கிரிக்கெட் தொடரின் இறுதி ஆட்டத்தில் **மும்பை இண்டியன்ஸ் பூனே சூப்பர் ஜயன்ட்ஸ் அணியை வீழ்த்தி 3-வது முறையாக சாம்பியன்** ஆனது.

24) ஐஸ் ஹாக்கி **உலக சாம்பியன்ஷிப் 2017 போட்டியில் கனடாவை வீழ்த்தி ஸ்வீடன் நாடு வெற்றி** பெற்றது.

25) **ஃபெடரேசன் கோப்பை கால்பந்து போட்டியில், பெங்களூரு FC அணி வெற்றி** பெற்றுள்ளது.

26) முதலாவது ஆசிய பசிபிக் **யோகா ஸ்போர்ட்ஸ் சாம்பியன்ஷிப் சர்வதேச போட்டியில் இராமநாதபுரம் மாவட்ட கல்லூரி மாணவி சி.காமாட்சி 2 வெள்ளிப் பதக்கங்களை** வென்றார்.

27) ஸ்பெயின் தலைநகர் **மாட்ரிட்டில் நடைபெற்ற லாலிகா என்றழைக்கப்படும் ஸ்பெயின் லீக் கால்பந்து போட்டியில் ரியல்மாட்ரிட் அணி சாம்பியன் பட்டம்** வென்றது.

28) 10-வது ஐ.பி.எல். **2017-ல் பூனே அணியில் விளையாடிய தமிழகத்தைச் சேர்ந்த வாஷிங்டன் சுந்தர் ஐ.பி.எல். இறுதிப் போட்டியில் விளையாடிய மிகவும் இளம் வயது வீரர் (ம) ஐபிஎல் இறுதிப் போட்டியில் 4 ஓவர்களில் மிகக் குறைந்த ரன்கள் அளித்த வீரர் என்ற 2 சாதனைகள்** படைத்துள்ளார்.

29) இந்திய பேட்மிண்டன் வீராங்கனை **பி.வி.சிந்து உலக பேட்மிண்டன் கூட்டமைப்பின் தடகள குழுவின் உறுப்பினராக தேர்வு** செய்யப்பட்டுள்ளார்.

30) தாய்லாந்து நாட்டில் நடைபெற்ற ஆசிய பசிபிக் யோகாசனப் போட்டியில் கும்மிடிப்பூண்டியைச் சேர்ந்த யோகா மாணவர்கள் ஆர்.லோகேஷ், டி.பிரவீன்குமார் ஆகியோர் தங்கப்பதக்கம் பெற்றுள்ளனர்.

31) இங்கிலாந்து **கவுண்டி கிரிக்கெட்டில் சர்ரே அணிக்காக விளையாடி வந்த சங்கக்காரா தொடர்ச்சியாக 5 சதங்களை எடுத்து சாதனை** செய்துள்ளார்.

32) **சுதிர்மான் கோப்பை பாட்மிண்டன் போட்டியின் இறுதிச் சுற்றில் சீனாவை 3-2 என்ற கணக்கில் வென்று தென்கொரியா சாம்பியன்** ஆனது.

33) சர்வதேச வாள் வீச்சு சாம்பியன்ஷிப் போட்டி :-
**ஐஸ்லாந்தில் நடைபெற்ற இப்போட்டியில் இந்திய வீராங்கனை பவானி தேவி தங்கப்பதக்கம்** வென்றார்.

34) செக் குடியரசில் நடைபெற்ற ஜுனியர்களுக்கான **சர்வதேச துப்பாக்கி சுடுதல் போட்டியில் இந்திய வீரர் அன்மோல் ஜெயின் 50 மீ பிஸ்டல் பிரிவில் வெள்ளிப் பதக்கம்** வென்றார் (மற்றும்)
**10 மீ ஏர் பிரிவில் தங்கமும், அணிகளுக்கான 50 மீ ஏர் பிஸ்டல் பிரிவில் வெள்ளியும்** வென்றார்.

**அர்ஜுன் பபிதா 10 மீ ஏர் ரைபிள் பிரிவில் வெள்ளிப் பதக்கம் வென்றார். (மற்றும்) 10 மீட்டர் ஏர் பிஸ்டல் பிரிவில் வெள்ளிப் பதக்கம் சௌத்ரி** என்பவர் வென்றார்.
**25 மீ ரேபிட் ஃபயர் பிஸ்டல் பிரிவில் அனீஷும் வெண்கலம்** வென்றார்.

35) **ஆசிய ஜூனியர் டென்னிஸ் சாம்பியன்ஷிப் போட்டிகள் 2017 மகாராஷ்டிராவின் பூனேவில்** நடைபெற உள்ளது.

**பொருளாதாரம் :-**

1) மத்திய ரிசர்வ் வங்கியிடமிருந்து, சிறிய நிதி வங்கி அமைக்க உரிமம் பெற்றுள்ள நிதி நிறுவனம் - **ஜனலக்ஷ்மி பினான்ஸியல் சர்வீஸஸ் லிமிடெட்.**

2) நிதியாண்டு முறையை ஏப்ரல் - மார்ச்சிலிருந்து, ஜனவரி – டிசம்பர் வரையில் மாற்றிய முதல் இந்திய மாநிலம் - **மத்தியபிரதேசம்.**

3) ஆசிய வளர்ச்சி **வங்கியின் 50-வது வருடாந்திர கூடுகை ஜப்பானின் டோக்கியோவிலுள்ள யோகோகமா நகரில்** நடைபெறுகிறது.

4) (Asia Pacific Ecosoc) ஆசியா மற்றும் பசுபிக் நாடுகளின் பொருளாதார மற்றும் சமூக ஆய்வு எனப்படும் **ஐ.நா.அறிக்கையின் படி 2017-ம் ஆண்டிற்கான இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி 7.1%** இருக்கும்.

5) **சுவாமி சின்மயானந்தா நூற்றாண்டு விழாவை முன்னிட்டு, இந்திய ரிசர்வ் வங்கி புதிய 10 ரூபாய் நாணயங்களை புழக்கத்தில்** கொண்டுவர உள்ளது.

6) 2018 நிதியாண்டில் **இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியானது 7.4% இருக்குமென ஆசிய வளர்ச்சி வங்கியின் அறிக்கையில்** கணக்கிடப்பட்டது.

7) **"பிட்ச் ரேட்டிங்" எனப்படும் உலக நாடுகளின் கடன் தரவரிசை நிறுவனம், இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி 2017-18 – ம் நிதியாண்டில் 7.7%** இருக்குமென கணித்துள்ளது.

**புத்தகங்கள் :-**

1) Meta Physics, Morals and Politic எனும் புத்தகத்தின் ஆசிரியர் – **அமல் குமார் மகோபாத்யாய.**

2) இந்திய பசுமைப் புரட்சியின் 50 ஆண்டுகள் - **எம்.எஸ்.சாமிநாதன் (வேளாண் விஞ்ஞானி)**

3) இந்தியா 2017 – **ராஜுவ் மெஹ்ரிஷி.**

4) "Confessions of a dying mind : The blind faith of atheism" - **ஹாலியன்லால் குடே**

5) Mann ki Baat - **ராஜேஷ் ஜெயின்.**